கூட்டுறவு துறையில் சிபில் ஸ்கோர் முறையை ரத்து செய்ய விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 10: கூட்டுறவுத் துறையில் சிபில் ஸ்கோர் அமலாக்கத்தை ரத்து செய்ய வேண்டும் என விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் மாசிலமணி வெளியிட்ட அறிக்கை:

இனி கூட்டுறவு கடன் பெறுவோர்களின் சிபில் ஸ்கோர் மதிப்பெண் பார்த்து தகுதி உள்ளோருக்கு மட்டும் கடன் வழங்கிட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.. விவசாயிகள் பெரும் கஷ்டப்பட்டு, பல மாதங்கள் காத்திருந்துதான் போட்ட முதலீட்டை திருப்பி எடுக்க முடியும். இப்படியான நிலையில், சிபில் ஸ்கோர் தகுதியை அளவீடாக கொண்டு விவசாயிகள் கடனை தீர்மானிக்க கூடாது. கடன் பெற்றோர் அக்கடனை திருப்பி செலுத்திய முறைகளை கணக்கீடாக கொண்ட சிபில் ஸ்கோர் மதிப்பெண்களின் அளவீடு தான், விவசாயிகள் கடன் பெறுவதற்கான தகுதியாக கொண்டு தீர்மானிக்கப்படும் என்றால் பெரும்பகுதி விவசாயிகளுக்கு கடனே கிடைக்காது.

எனவே முதல்வர் தலையிட்டு வேளாண் தொழிலுக்கான கடன்களில் சிபில் ஸ்கோர் முறையை கைவிட நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை, எரிசக்தி உள்ளிட்ட துறை அமைச்சர்களுடன்

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

▶ முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை, ஜூன் 10: முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை, தலைமை செயலகத்தில் நேற்று நெடுஞ்சாலை, எரிசக்தி, கூட்டுறவு, உணவு துறை அமைச்சர்களுடன் ஆலோசனை கூட்டம் தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தீவிரமாக கூட்டணி கட்சிகளுடன் இணைந்து வியூகம் வகுத்து வருகின்றன. ஆளும் திமுகவை பொறுத்தவரை, 8 மண்டல பொறுப்பாளர்கள், 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் கூட்டங்களை நடத்தி வருகிறது.

மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், 'ஓரணியில் தமிழ்நாடு' என்னும் இயக்கத்தை தொடங்கி கட்சியில் புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கட்சியினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக திமுக மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொளி மூலம் நடைபெற்றது.

தலைமை செயலகத்தில் நடந்தது

இந்நிலையில் நேற்று காலை 11 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் துறை சார்பான ஆலோசனை கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நெடுஞ்சாலை துறை, சிறு துறைமுகங்கள் துறை, மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்து துறை, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பான ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் எ.வ.வேலு, பெரியகருப்பன், சக்கரபாணி, சிவசங்கர் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன், துறை சார்பான செயலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டம், ஒவ்வொரு துறை சார்பில் தனித்தனியாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், தமிழக சட்டப்பேரவையில் கடந்த கூட்டங்களில் துறை சார்பாக நடைபெற்ற மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய நிலை, எந்தெந்த திட்டங்கள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது, முடிந்த திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சர்கள் மற்றும் துறை செயலாளர்களுடன் விவாதித்தார். தமிழகத்தில் 2026ம் ஆண்டு மே மாதம் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அறிவிக்கப்பட்ட பணிகளை விரைந்து முடித்து, முக்கிய திட்டங்களை மக்களின் செயல்பாட்டுக்கு விரைவில் கொண்டு வர வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் மாநிலங்களவை தேர்தல்

வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது

6 பேரும் ஒருமனதாக தேர்வாகின்றனர்

சென்னை, ஜூன் 10: தமிழ்நாட்டில் மாநிலங்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது. இந்த தேர்தலில் திமுக, அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் 6 பேர் ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில், அவர்கள் ஒருமனதாக வெற்றிபெறும் வாய்ப்பு உறுதியாகியுள்ளது.

▶ வில்சன

▶ எஸ்.ஆர்.சிவலிங்கம்

▶ கவிஞர் சல்மா

▶ கமல்ஹாசன்

▶ ஐ.எஸ்.இன்பதுரை

▶ ம.தனபால்

தமிழ்நாட்டில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி.க்களுக்கான தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மாதம் அறிவித்திருந்தது. அதன்படி, தற்போது மாநிலங்களவை எம்.பி.யாக உள்ள திமுகவை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, அதிமுகவை சேர்ந்த சந்திரசேகரன், பாமக தலைவர் அன்புமணி ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஜூலை 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து அந்த 6 மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது.

அதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 2ம் தேதி தொடங்கியது. நேற்று (9ம் தேதி) மாலை 3 மணியுடன் மனு தாக்கல் நிறைவடைந்தது. இன்று வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெறுகிறது. வரும் 12ம் தேதி (வியாழன்) மாலை வரை மனுக்களை திரும்பப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் போட்டியிருந்தால் வரும் 19ம்தேதி தேர்தல் நடைபெறும்.

இந்த தேர்தலில் திமுக சார்பில் வழக்கறிஞர் வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், ஆகியோர் கடந்த 6ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அதேபோல, கடந்த 6ம் தேதி பிற்பகல் அதிமுக சார்பில் ஐ.எஸ். இன்பதுரை, ம.தனபால் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதுதவிர 3 சுயேட்சை வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஒரு வேட்பாளருக்கு 10 எம்எல்ஏக்கள் முன்மொழிய வேண்டும். அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிடும் 6 வேட்பாளர்களுக்கும் திமுக, அதிமுக எம்எல்ஏக்கள் தலா 10 பேர் முன்மொழிந்துள்ளனர். சுயேட்சை வேட்பாளர்கள் 3 பேருக்கும் ஒரு எம்எல்ஏ கூட முன்மொழியவில்லை. அதனால், இன்று வேட்புமனு பரிசீலனை நடைபெறும்போது இந்த 3 மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டு விடும். அரசியல் கட்சி வேட்பாளர்களின் 6 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த நிலையில், வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து வேட்புமனு பரிசீலனை நடைபெற்று, இறுதி வேட்பாளர் பட்டியல் வருகிற 12ம் தேதி மாலை 3 மணிக்கு வெளியிடப்படும். அன்றைய தினமே திமுக, அதிமுக சார்பில் வேட்புமனு தாக்கல் செய்துள்ள 6 பேரும் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

8ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை

அரசு சேவை இல்ல காவலாளி கைது

சென்னை, ஜூன் 10: தாம்பரம், சானிடோரியம், ஜட்ஜ் காலனி பகுதியில் தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை சார்பில் அரசு சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. இதில், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகாவை சேர்ந்த 13 வயது சிறுமி கடந்த 5 நாட்களுக்கு முன்பு சேர்ந்து குரோம்பேட்டையில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை சேவை இல்லத்தில் சிறுமி தூங்கி எழுந்து வரும்போது மர்ம நபர் ஒருவர் அவரை பாலியல் துன்புறுத்தல் செய்ய முயன்றுள்ளார். மாணவி அலறி எதிர்ப்பு காட்டவே அந்த நபரை மாணவியை கொடூரமாக தாக்கி உள்ளார். இதில் மாணவிக்கு கால் முறிவு ஏற்பட்டது. மாணவியின் அலறல் சத்தம் கேட்டு ஆட்கள் வருவதற்குள் மர்ம நபர் அங்கிருந்து தப்பினார். மாணவி மீட்கப்பட்டு சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த சிட்லபாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் அரசு சேவை மையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். மேலும், வழக்கு பதிந்து விசாரித்தனர். இதில் சேவை இல்ல காவலாளி மேத்யூ(49) தான் இச்செயலை செய்தது தெரிய வந்தது. மாணவியும் அவரை அடையாளம் காட்டினார்.

இதனைத்தொடர்ந்து போலீசார் மேத்யூவை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்ற உத்தவின்படி மேத்யூவை போலீசார் சிறையில் அடைத்தனர். காவலாளி மேத்யூ அரசு சேவை இல்லத்தில் உள்ள வேறு ஏதாவது மாணவிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டாரா என்பது குறித்து அரசு சேவை இல்லத்தில் தங்கி உள்ள மற்ற மாணவிகளிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை பற்றி பேச பாஜவிற்கு எந்த தகுதியும் இல்லை

திமுக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்பி பேட்டி

சென்னை, ஜூன் 10: திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்பி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று அளித்த பேட்டி:

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மதுரையில் பேசிய பேச்சை அனைவரும் அறிவோம். நாட்டின் உள்துறை அமைச்சர் என்ற தகுதியை மறந்து, அவர் பேசியதை சுருக்கி சொல்ல வேண்டும் என்றால், அப்பட்டமான பொய், அருவருப்பான வஞ்சகம், பிளவு நோக்கம் கொண்ட சூதுரை. இது கூட்டாட்சி தத்துவத்திற்கு அழகல்ல.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதி, வளர்ச்சி திட்டங்கள், ஒன்றிய அரசின் நிதி பல நேரங்களில் கிடைக்காவிட்டாலும் மாநில அரசின் நிதியை கொடுத்து வளர்ச்சி திட்டப்பணிகள் தடைபடாமல் விரைவாக வழங்கி நடைமுறைப்படுத்தி வருகிறார். இதை பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசும் , பாஜ கட்சியும், அமித்ஷாவை வரவைத்து இப்படி ஒரு கேலிக்கூத்தான, அருவருப்பான அரசியல் நாகரிகத்திற்கு புறம்பான காரியத்தை அரங்கேற்றியுள்ளார்கள்.

பாஜவின் எந்த மாதிரியான பிளவுவாதமும், மத அரசியலும் தமிழ்நாட்டில் எடுபடவில்லை. எல்லா தேர்தல்களிலும் மக்கள் திமுகவின் பின்னால் நிற்கிறார்கள். இதை புரிந்துகொள்ள முடியாமல், ஜீரணித்துக் கொள்ள முடியாமல் இவர்கள் பேசுவதை பார்த்து எங்களுக்கு எதற்கு பயம்? இவர்களைப் பார்த்து சிரிப்பு தான் வருகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு 5 முறை நாட்டின் பிரதமர் தமிழ்நாடு வந்தார். அவரின் வருகையே சொல்லும் யாருக்கு பயம் என்று.

திமுகவின் தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளில் பெரும்பாலான வற்றை நிறைவேற்றிவிட்டோம். அரசு ஊழியர்களுக்கான வாக்குறுதி மட்டும் நிலுவையில் உள்ளது. ஆனால் அதற்கும் ஒரு குழு அமைத்துள்ளார் முதல்வர். வாக்குறுதிகளில் சொல்லாத பலவற்றை இந்த அரசு செய்துள்ளது.

எந்த அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு வர போகிறது என திமுக தொடர்ந்து கேள்வி எழுப்பினாலும் எந்த பதிலும் பாஜவிடம் இல்லை. 800க்கும் அதிகமான இருக்கைகளை வைத்து புதிய நாடாளுமன்ற கட்டிடத்தைக் கட்ட என்ன அவசியம்? மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பைச் செய்தால் - கொண்டு வந்தால் தென்னிந்தியா முற்றிலும் பாதிக்கப்படும். தென்னிந்திய மாநிலங்களின் துணை இல்லாமலே எந்த ஒரு மசோதாவையும் அவர்களால் நிறைவேற்ற முடியும் என்பதுதான் அதற்குள் இருக்கும் சூது. இதை முறியடித்த ஒரே தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின்தான். அதை டெல்லி வரை அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே மதுரையில் முருகன் மாநாட்டை நடத்துகின்றனர். மதவாதத்தைத் தூண்டி விட்டு, அதன் மூலம் சிறுபான்மையினருக்கு எதிராக அரசியல் செய்து ஆதாயம் தேட முயற்சிப்பதை மதுரை மக்களே விரும்பவில்லை. தமிழைப் பற்றி இவ்வளவு பேசும் அமித்ஷா, கீழடி ஆய்வையும், இரும்பு பயன்பாட்டின் அறிக்கையையும் ஒன்றிய அரசு திரும்ப திரும்ப ஏன் நிராகரிக்கிறது என தெரியவில்லை. தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், திராவிடத்திற்கும் எதிரான மனநிலையை அவர்களே வெளிக்காட்டிக் கொள்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வட இந்திய மொழிகளின் நிலைமை என்ன என்பதை யோசிக்க வேண்டும். இந்தியைக் கொண்டு வந்தவர்கள், அடுத்ததாக சமஸ்கிருதம் மொழியை கொண்டு வருவார்கள். எத்தனை முறை மோடி தமிழகம் வந்தாரோ அத்தனை வாக்கு வித்தியாசம் நாடாளுமன்ற தேர்தலில் திமுகவிற்கு கிடைத்தது. தற்போது எத்தனை முறை அமித்ஷா தமிழகம் வருகிறாரோ அத்தனை வெற்றி தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை பற்றி பேச பாஜகவிற்கு எந்த தகுதியும் இல்லை. கூட்டணி ஆட்சிதான் அமையும் என அமித்ஷா கூறியது குறித்து மீண்டும் எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும். எப்படிப்பட்ட கூட்டணி அமைந்தாலும் அதை எதிர்கொள்ளும் திறன் எங்கள் முதல்வருக்கு உண்டு.

இவ்வாறு அவர் கூறினார்.

தங்கம் விலையில் மேலும் மாற்றம்

2 நாட்களில் பவுன் ரூ.1400 சரிந்தது

சென்னை, ஜூன் 10: தங்கம் விலை 2 நாட்களில் பவுனுக்கு ரூ.1400 குறைந்துள்ளது.

தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்றம், இறக்கத்துடனேயே காணப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஏற்றத்துடன் காணப்பட்ட தங்கம் விலை யாரும் எதிர்பார்க்காத வகையில் கடந்த 7ம் தேதி அன்று அதிரடி சரிவை சந்தித்தது. அதாவது தங்கம் விலை பவுனுக்கு ரூ.1200 குறைந்து ஒரு பவுன் ரூ.71,840க்கு விற்பனையானது. தொடர் விலை யேற்றத்தை சந்தித்து வந்த நகை வாங்குவோருக்கு இந்த விலை குறைவு ஆறுதலை ஏற்படுத்தியிருந்தது.

தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தங்கம் மார்க்கெட்டுக்கு விடுமுறை என்பதால் தங்கம் விலையில் எந்த தவித மாற்றமும் ஏற்படவில்லை. முந்தைய நாள் விலையிலேயே தங்கம் விற்பனையானது. ஒரு நாள் விடுமுறைக்கு பிறகு நேற்று தங்கம் மார்க்கெட் தொடங்கியது. அதுவும் வாரத்தின் தொடக்க நாளிலேயே தங்கம் விலை குறைந்திருந்தது.

அதாவது, தங்கம் விலை கிராமுக்கு ரூ.25 குறைந்து ஒரு கிராம் ரூ.8,955 ஆகவும், பவுனுக்கு ரூ.200 குறைந்து ஒரு பவுன் ரூ.71,640க்கும் விற்பனையானது. வெள்ளி விலை நேற்று அதிகரித்து இருந்தது. கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.118க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,18,000க்கும் விற்பனையானது.

முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

muthoot HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: TC எண் 14/2074-7, முத்தூட் சென்டர், புன்னேன் சாலை, திருவனந்தபுரம்-695 034, CIN எண் - U65922KL2010PLC025624, கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13 ஆவது தளம், பாரிஜி கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com

பிற்சேர்க்கை-IV [விதி 8(1)] சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம் எண். 2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கினார். மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்கள் முடிந்த பிறகும், கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்துள்ளார்.

வ. எண்	கடன் கணக்கு எண்/ கடன்தாரர் / உப-கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்	மொத்த நிலுவைத் தொகை (ரூ.) வருங்கால வட்டியுடன்	சுவாதீனம் நாள்
1	கடன் கணக்கு எண். 11114091539, 1. சம்பத்து (எ) சம்பத் முனிசாமி 2. S.தனலட்சுமி (எ) தனலட்சுமி சம்பத்	19-மார்ச்-2025	18-மார்ச்-2025 தேதியன்று Rs.6,82,144.00/	05-ஜூன்-2025

கடனீட்டுச் சொத்து(கள்) /அசையாச் சொத்து(கள்) விவரம்: சொத்தின் நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் உள்ள வேலூர் பதிவு மாவட்டம், குடியாத்தம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் மேலமல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு புஞ்சை பழைய பகுதி எண்.43/2, புதிய பகுதி எண்.43/2D இல் 1481½ சதுர அடி அல்லது 137.63 சதுர மீட்டர் பரப்பளவை அளவிடுதல். எல்லைக்குட்பட்டது:- கிழக்கு: சொத்து பிரகாஷ் என்பவருக்குச் சொந்தமானது. மேற்கு: மீதமுள்ள சொத்து தாங்கி S.No.43/2. வடக்கு: மீதமுள்ள சொத்து தாங்கி S.No.43/2. தெற்கு: ஒலல்காசி நோக்கிய சாலை. அளவீட்டு அளவுகள்:- வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 24¾ அடி. தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 26 அடி. கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 59¾ அடி. மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 57 அடி. 1481½ சதுர அடி பரப்பளவையும், 137.63 சதுர மீட்டர், நிலம் மற்றும் கட்டிடம்.

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் மேற்குறிப்பிட்ட கோரப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய மேற்கொண்டு வட்டியுடனான தொகை, முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் வரூலுக்கு உட்படும்.

இடம் :வேலூர், நாள் : 10 ஜூன், 2025 — ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி - முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

சைக்கிளிங் லீக் போட்டி

வெற்றி பெற்றவர்கள் துணை முதல்வரிடம் வாழ்த்து

சென்னை, ஜூன் 10: தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் 7 மற்றும் 8ம் தேதி 3.75 கி.மீட்டர் நீளமுள்ள தீவுத்திடல் பார்முலா 4 கார் ரேஸ் நடைபெற்ற பாதையில் தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியை (3 வது சீசன்) நடத்தியது. இந்த போட்டிகளில் RANCYCERS அணியானது 64 புள்ளிகளை பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையை வென்றது. திருச்சி மாவட்டத்தை சேர்ந்த திருச்சி Rockfort Riders அணியானது 54 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், சென்னை மாவட்டத்தை சேர்ந்த நம்ம சென்னை ரைடர்ஸ் அணியானது 38 புள்ளிகளுடன் 3ம் இடத்தையும் பிடித்தன. இந்த போட்டிகளில், சைக்கிளிங் வீரர் கிஷோர் இந்த பருவத்திற்கான சிறந்த வீரர் விருதினை பெற்றார்.

தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்த குழுவினர் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து, வெற்றி கோப்பைகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

தொண்டர்கள் எப்போதும் என் பக்கம் தான்

ராமதாஸ் பேட்டி

சென்னை, ஜூன் 10: தொண்டர்கள் எப்போதும் என் பக்கம் தான் என ராமதாஸ் தெரிவித்தார்.

பாமக நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி இடையேயான மோதல் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், ஜூன் 7ம் தேதி தைலாபுரத்தில் இருந்து சென்னை வந்தார் ராமதாஸ். சென்னையில் ஆடிட்டர் குருமூர்த்தி, முன்னாள் மேயர் சைதை துரைசாமி ஆகியோர் ராமதாஸை சந்தித்து பேசினர்.

இந்த நிலையில், சென்னையில் நேற்று நிருபர்களிடம் ராமதாஸ் கூறியதாவது:

2 நாட்களாக பத்திரிகையாளர்கள் அன்புதொல்லை கொடுத்தீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செய்தியை என்னால் கொடுக்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் தீர்வு கிடைக்கும். அந்த தீர்வு கட்சிக்கும், நாட்டுக்கும் சரியான தீர்வாக இருக்கும். அதுவரை பத்திரிகையாளர்களிடம் இருந்து பிரியாவிடை பெறுகிறேன். பாஜவுக்கு எதிரான நிலை பாட்டில் தான் தற்போதும் இருக்கிறீர்களா என்ற கேள்விக்கு இப்போது சொல்ல முடியாது. தொண்டர்கள் எப்போதும் என் பக்கம் தான். என்னை குலதெய்வமாக கடவுளாக நினைக்கும் தொண்டர்கள். அவர்கள் என் சொந்தங்கள். அவர்கள் தான் எனக்கு வழிகாட்டிகள். அவர்கள் நலன், முன்னேற்றத்துக்காக எதையும் செய்வேன் என்றார்.

பாமக இடதுசாரி சிந்தனையுடன் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி. தற்போது வலதுசாரி சிந்தனைகள் அதிகரித்துள்ளது என திருமாவளவன் கூறியுள்ளதை எப்படி பார்க்கிறீர்கள் என்ற கேட்டபோது, "என்னிடம் பூதக்கண்ணாடி இல்லை" என தெரிவித்தார்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

GRIHUM HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: 2ஆவது தளம், B-பிளாக், எண் 5, RJ வளாகம், காட்பாடி பிரதான சாலை, பாலாறு மேம்பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்-632006

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாரி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பங்களிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26/06/2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பன